செய்தி வெளியீடு எண்:981 நாள்:29.10.2021

## செய்தி வெளியீடு

### மாண்புமிகு அமைச்சர் சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அவர்களின் அறிவிப்பு – ஊரகப் பகுதி, நகர்ப்புற பகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் தனியார் வாடகை கட்டடங்களில் செயல்படும் 7,228 குழந்தைகள் மையங்களுக்கு மாத வாடகை உயர்த்தி வழங்குதல்

மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள், 2021–2022 ஆம் ஆண்டிற்கான சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மானியக் கோரிக்கையை (மானியக் கோரிக்கை எண்.45) தமிழ்நாடு சட்டப்பேரவையில் தாக்கல் செய்த போது, ஏனையவற்றுக்கிடையே, "ஊரகப் பகுதி, நகர்ப்புற பகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் தனியார் வாடகை கட்டடங்களில் செயல்படும் 7,228 குழந்தைகள் மையங்களுக்கு மாத வாடகை உயர்த்தி வழங்கப்படும்" என்று அறிவிப்பு வெளியிட்டார்கள்.

மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில், தனியார் வாடகைக் கட்டடங்களில் செயல்படும் 7,228 குழந்தைகள் மையங்களுக்கு மாத வாடகை, ஊரகப் பகுதிகளில் ரூ.1,000/– ஆகவும், நகர்ப்புற பகுதிகளில் ரூ.4,000/– ஆகவும், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் ரூ.6,000/– ஆகவும் உயர்த்தி வழங்கி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

ஷம்பு கல்லோலிகர்,
அரசு முதன்மைச் செயலாளர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9